# SOUTH EASTERN UNIVERITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2006 / 2007
## HELD IN MAY - 2007

## PHY 2.21– ANALYTICAL PHILOSOSPHY

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

### பகுதி - I

01. பகுப்பாய்வு மெய்யியலுக்கு அடிப்படையாக அமைந்த பிரதான போக்குகள் என்ன? சுருக்கமாக ஆராய்க.

02. ஜி.ஈ. மூவர் (G.E.Moore), பேட்ரண்ட் றஸல் (B. Russel) என்போர்களுடைய சிந்தனையை மையமாகக் கொண்டே பகுப்பாய்வு மெய்யியல் வளர்ச்சி பெற்றது என்று கூறுவது சரியா? ஆராய்க.

03. (அ) புலன் தரவுகள் என்றால் என்ன? ஜி.ஈ. மூவரின் விளக்க உரையின் துணையுடன் இதனை விளக்குக.

    (ஆ) அர்த்தமும் - குறிப்பும் தொடர்பான ஜி.ஈ.மூவரின் நிலைப்பாட்டை சுருக்கமாக பரிசீலிக்குக.

04. (அ) பேட்ரண்ட் றஸலின் தர்க்க அணுவாத (Logical Atomism) சிந்தனைப் போக்குக்கு ஆதாரமாக அமைந்த மெய்யியல் போக்குகள் யாவை?

    (ஆ) பேட்ரண்ட் றஸலின் தர்க்க அணுவாதமானது மொழி பற்றிய பகுப்பாய்வுக்கு அப்பால் சென்று, புற உலகு எமக்கு எவ்வாறு தரப்படுகின்றது என்பதைக் கண்டுபிடிக்க உதவுகின்றது. நீர் இதனை ஏற்கிறீரா? சுருக்கமாக விளக்குக.

### பகுதி - II

05. (அ) முந்திய விக்கன்ஸ்டைனின் ட்ரெக்டேட்டஸில் (Tractatus) காணப்படும் முக்கிய கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறுக.

    (ஆ) பிந்திய விக்கன்ஸ்டைன் ‘மெய்யியல் ஆய்வுகள்’ (Philosophical Investigation) எனும் நூலில் சில மெய்யியல் நுட்பங்களை அறிமுகப்படுத்தியுள்ளார். அதனைச் சுருக்கமாகக் கூறுக.

06. (அ) வியன்னா வட்டத் தர்க்கப் புலனெறிவாதத்தின் தோற்றத்திற்கான அடிப்படைக் காரணங்கள் யாவை?

    (ஆ) தர்க்கப் புலனெறிவாதிகளின் அர்த்தம் பற்றிய உரைக்கல் என்பது என்ன? அதன் நோக்கங்கள் எந்தளவு நிறைவேறின என்பதை எடுத்துக் கூறுக.

07. (அ) ‘வகையீடுகள்’ பற்றிய கில்பர்ட் றைல்லின் (Gilbert Ryle) நோக்கைத் தெளிவுபடுத்துக.

    (ஆ) புலன் தரவுகள் தொடர்பான கில்பர்ட் றைல்லின் அணுகுமுறையை சுருக்கமாகக் குறிப்பிடுக.

08. பின்வருவனவற்றுள் ஏதேனும் **இரண்டினைப்** பற்றி சிறுகுறிப்பெழுதுக.

    (i) ஏ.ஜே.அயர் (A.J. Ayer)
    (ii) ஜே.எம். ஒஸ்டின் (J.L. Austin)
    (iii) அகஸ்டி கொம்ட்டே (Auguste Comte)
    (iv) ஆர். கார்ணாப் (R. Carnap)

***